# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 24.04.2017 | | 2017ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24–ம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க கூட்டம் நடைபெறும்.<br><br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 24.04.2017 | 42 | **<u>பொருள் எண். 1</u>**<br><br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளில் பொது மக்களுக்கு பயன்படும் வகையில் மேற்கொள்ளப்படும் குடிநீர்பணி, பாதாளசாக்கடை அமைக்கும் பணி, மின் விளக்கு அமைக்கும் பணி, நிழற்குடை அமைக்கும் பணி மற்றும் பேரிடர் காலங்களில் ஏற்படும் இடர்பாடுகளை நிவர்த்தி செய்யும் பணிகளை உடனுக்குடன் செய்து முடிக்க இயலாமல் பிறத்துறைகளிடம் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது, மேலும் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்த ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு கீழ்கண்ட மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் இதர மாவட்ட சாலைகளை நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | இடம் | சாலை வகைபாடு | அளவு | சர்வே எண்கள் |
|---|---|---|---|---|
| 1. | திருச்சி–தஞ்சை மெயின்சாலை | தேசிய நெடுஞ்சாலை | 5.95 கி.மீ | 171, 179, 432, 486, 494, 628, 629, 630, 631 |
| 2. | துவாக்குடி அண்ணாவளைவு முதல் வ.உ.சி நகர் வரை | மாநில நெடுஞ்சாலை | 2.05 கி.மீ | 605, 607, ,600, 595, 558, 552, 836 பகுதி, 837 பகுதி 1, 838 பகுதி 1, 839 பகுதி 1, 830 பகுதி 1, 849 பகுதி 39 |

மேற்கண்ட சாலைகளை துவாக்குடி நகராட்சி வசம் எடுத்துக் கொள்ள அரசுக்கு பரிந்துரை செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு உரிய பிரேரனை அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| | | <u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 447 / அ1 / 2017** | |
| 24.04.2017 | 43 | <u>**பொருள் எண். 2**</u><br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழ்வாதார பாதுகாப்பு, நடைபாதை விற்பனையை ஒழுங்கு படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் திட்டம் 2016–ன் கீழ் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுக்கும் பணி, அடையாள அட்டை வழங்குதல் மற்றும் அதன் சார்ந்த பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ. 1,00,000/– ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 403 / அ1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 24.04.2017 | 44 | <u>**பொருள் எண். 3**</u><br>துவாக்குடி நகராட்சியில் பணிபுரியும் ஆணையர், உள் மற்றும் வெளிப்புற அலுவலர்கள் அலுவலக பணியின் காரணமாக வெளியூர் பயணம் மேற்கொள்வதற்கு 2017–18 ம் நிதியாண்டிற்கு பயணப்படி வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 100000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். / சி1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 24.04.2017 | 45 | <u>**பொருள் எண். 4**</u><br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வரியினங்களை செலுத்த கோரி பொது மக்களுக்கு ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி பயன்படுத்தி அறிவிப்பு செய்தமைக்கு தொகை ரூ. 9,000/– மட்டும் வழங்க K. R. பாலன் சவுண்ட் சர்வீஸ் துவாக்குடிமலை திருச்சி என்பவரிடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>எனவே மேற்படியான நிறுவனத்திற்கு தொகை ரூ. 9.000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 426 / அ1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>24.04.2017</td>
<td>46</td>
<td>
<u>பொருள் எண். 5</u><br>
துவாக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட விவரப்படியான வாகனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள விவரப்படி சாலைவரி ரூ. 17,236/– மட்டுமூ போக்குவரத்து துறை, திருவெறும்பூர் என்ற அலுவலகத்திற்கு இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ. 17,236/– ஐ துப்புரவு ஆய்வருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்</td><td>வாகனம் விவரம்</td><td>சாலை வரி தொகை</td></tr>
<tr><td>1.</td><td>TN 45 AY 0474</td><td>3618/–</td></tr>
<tr><td></td><td>TN 45 BY 4097</td><td>3618/–</td></tr>
<tr><td></td><td>TN 45 BY 2588</td><td>10000/–</td></tr>
<tr><td></td><td>Total</td><td>17,236/–</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 370 / எச்/ 2017
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>24.04.2017</td>
<td>47</td>
<td>
<u>பொருள் எண். 6</u><br>
துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான TN 45 BY 4097 என்ற வண்டியை பழுது பார்த்தமைக்கு தொகை ரூ. 5,258/– மட்டும் வழங்க கோரி அரசு அங்கீகாரம் பெற்ற TVS நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு தொகை ரூ. 5,258/– மட்டும் வழங்கலாம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 394 / எச்1 / 2017
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>24.04.2017</td>
<td>48</td>
<td>
<u>பொருள் எண். 7</u><br>
துவாக்குடி நகராட்சியில் 7 முதல் 15–வது வார்டுகள் வரை 2016–17 ம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பைப்லைன், மினி பவர் பம்புகள் மற்றும் ஆழ்துளை கிணறு அடிப்பம்புகள் பராமரிப்பு மற்றும் பழுதுகள் நீக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு. எம். ஜீவானந்தம் என்பவரிடம் கடந்த 28.07.2016–ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 1.9.2016 ம் தேதியில் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, தற்போது பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 2017–18 ம் ஆண்டிற்கான விலை விகிதப்பட்டியல் வரும் வரை பராமரிப்பு பணி மேற்கொள்ள அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விகிதத்தில் குடிநீர் பைப்லைன் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 569 / இ1 / 2016
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>24.04.2017</td>
<td>49</td>
<td>
<u>பொருள் எண். 8</u>
துவாக்குடி நகராட்சியில் 1 முதல் 6–வது வார்டுகள் வரை 2016–17 ம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பைப்லைன், மினி பவர் பம்புகள் மற்றும் ஆழ்துளை கிணறு அடிப்பம்புகள் பராமரிப்பு மற்றும் பழுதுகள் நீக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ்.ஏ. அரசு என்பவரிடம் கடந்த 28.07.2016–ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 1.9.2016 ம் தேதியில் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, தற்போது பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 2017–18 ம் ஆண்டிற்கான விலை விகிதப்பட்டியல் வரும் வரை பராமரிப்பு பணி மேற்கொள்ள அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விகிதத்தில் குடிநீர் பைப்லைன் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 569 / இ1 / 2016
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>24.04.2017</td>
<td>50</td>
<td>
<u>பொருள் எண். 9</u>
துவாக்குடி நகராட்சி பகுதியில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் நகர்புற மேம்பாட்டிற்காக மாவட்ட அளவிலான ஏழை மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்கு மத்திய அரசால் அனைவருக்கும் வீட்டு வசதி வழங்கும் பொருட்டு பாரத பிரதமரின் வீட்டு வசதி திட்டம் நகராட்சி பகுதிகளில் செயல்படுத்த தகுதி வாய்ந்த பயனாளிகளின் விவர கணக்கெடுப்பு பணியினை சுய உதவிக்குழுவினரை கொண்டு மேற்கொள்ளவும் மேலும் ஒரு நபருக்கு ஊதியமாக ரூ. 10000/– வழங்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 15350/2016/IHSDP-2 நாள். 01.072016–ல் தெரிவித்துள்ளதை தொடர்ந்து துவாக்குடி நகராட்சி பகுதியில் 1 –வது வார்டு முதல் 15–வது வார்டு வரை உள்ள வீடற்ற பயனாளிகளை கண்டறிந்து தகவல் பெற்று விண்ணப்பம் பூர்த்தி செய்து நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க மகளிர் சுய உதவிக்குழுவினரை சேர்ந்த 15 நபர்களை வார்டுக்கு ஒருவர் வீதம் நியமித்து கணக்கெடுப்பு செய்திட இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண். 1029/இ1/2016 நாள். 26.8.2016 –ல் உத்திரவிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க 15 வார்டுகளில் கணக்கெடுப்பு நடத்தி 3235 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1029/இ1/2016 நாள். 24,3.2017 மற்றும் 05.04.2017 –.ம் தேதிய கடிதங்களில் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் திருச்சி அவர்களுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தில் கணக்கெடுப்பு நடத்திய மகளிர் சுயஉதவிக்குழுவினர் 15 நபர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 10,000/– வீதம் 15 நபர்களுக்கு ரூ. 1,50,000/– ம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>சுயஉதவிக்குழு உறுப்பினர் பெயர்</th><th>ஊதியம் தொகை<br>(ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>எஸ். ஆரோக்கியம்மாள்</td><td>10,000/–</td></tr>
<tr><td>2.</td><td>எஸ். கவிதா</td><td>10,000/–</td></tr>
<tr><td>3.</td><td>ஜி. சந்திரபிரபா</td><td>10,000/–</td></tr>
<tr><td>4.</td><td>ஏ. ஜனனி</td><td>10,000/–</td></tr>
</table>
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 5. | எஸ். தாட்சாயினி | 10,000/– |
| 6. | ஜா. ஜெயசீலி | 10,000/– |
| 7. | எம். தனபாக்கியம் | 10,000/– |
| 8. | ஏ. வெங்கடேஸ்வரி | 10,000/– |
| 9. | எஸ். ரசூல் | 10,000/– |
| 10. | ஜி. பேபியம்மாள் | 10,000/– |
| 11. | பி. புவனேஸ்வரி | 10,000/– |
| 12. | நிர்மலா சீனிவாசன் | 10,000/– |
| 13. | டி. சாந்தி | 10,000/– |
| 14. | பி. சீத்தாலெட்சுமி | 10,000/– |
| 15 | எஸ். கவிதா | 10,000/– |
| | **மொத்தம்** | **1,50,000/–** |

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1029 / இ1 / 2016**

______________ **X** ______________